# SRI SARADA COLLEGE OF EDUCATION (AUTONOMOUS), SALEM – 16

## Criteria – II : Teaching Learning and Evaluation

### KEY INDICATOR : 2.4.COMPETENCY AND SKILL DEVELOPM,ENT

## Metric No : 2.4.9. Internship Programme is systematically planned with necessary Preparedness

## 2.4.9. (E) Any other Relevant Information

# Selection of Schools for Internship

# (Order from CEO)

Digitally Signed By:S SANTHI

SALEM

Signing Date:21.04.2023 18:33

சேலம், முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர். முனைவர் திரு.இரா. முருகன், எம்.எஸ்.சி., பி.எட்.,எம்.பில்., பி.எச்.டி..

ஓ.மு.எண்.. 015124 / ஈ4 / 2021 நாள். .12.2021

| | |
|---|---|
| பொருள்.. | கற்பிப்பு பயிற்சி – சேலம் மாவட்டம், பேர்லேண்ட்ஸ், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் – 2021-22 (இரண்டாம் ஆண்டு) ஆம் கல்வியாண்டு –பி.எட். பயிலுதல் – உயர்/மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கு பயிற்சி மேற்கொள்ள அனுமதி அளித்தல் – சார்பு. |
| பார்வை.. | சேலம் மாவட்டம், பேர்லேண்ட்ஸ், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி , முதல்வரின் கடித நாள். 29.11.2021. |

**********************

சேலம் மாவட்டம், பேர்லேண்ட்ஸ், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியில் பி.எட்.பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உற்று நோக்கல்/கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள பார்வையில் காணும் கடிதத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி வழங்குதல் சார்ந்து பரிசீலிக்கப்பட்டது.

பார்வையில் காணும் 29.11.2021 தேதியிட்ட முதல்வரின் கடிதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 2021–22 (இரண்டாம் ஆண்டு) ஆம் கல்வியாண்டில் இணைப்பில் கண்டுள்ள 45(நாற்பத்தி ஐந்து) மாணவ/மாணவியர்களுக்கு அவர்களின் பெயருக்கெதிரே உள்ள பள்ளியில் உற்று நோக்கல்/கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி ஆணை வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1 பள்ளியின் அன்றாட பணிகளுக்கு இடையூறு இல்லாமல், கற்பிப்புப் பயிற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

2 கோவிட் 19 நோய்த்தொற்று தடுக்கும் நெறிமுறைகள்(SOP) பின்பற்றுதல் வேண்டும்.

3 ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழிகாட்டி ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

4 பாடக்குறிப்பேடு பராமரித்தல் வேண்டும். (Notes Of Lesson) அதனை வழிகாட்டி ஆசிரியர் (ஒவ்வொரு நாளும்) ஆய்வு செய்து குறிப்பெழுதுதல் வேண்டும்.

5 பள்ளியின் முறையான ஆசிரியர்கள் போல் பள்ளி வேலை நேரத்திற்கு முன் வருவதுடன், பள்ளி முடிவுற்ற பின்னரே, பள்ளியை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பதுடன், பள்ளி வேலை நேரத்தில் பள்ளியிலேயே இருத்தல் வேண்டும்.

6 வாராந்திரத் தேர்வுகள் நடத்தி, அதனை மதிப்பீடு செய்து, மாணவர்கள் தகுதி பற்றிய பதிவேடு ஒன்றைப் பராமரித்தல் வேண்டும். இதனை வழிகாட்டி ஆசிரியர் பார்வையிட்டு குறிப்பெழுதுதல் வேண்டும்.

7 நாள்தோறும் நடத்தப்பட வேண்டிய பாடங்கள் சார்ந்து முன்னதாக குறிப்பெடுத்து அவைகளைக் கொண்டு மட்டுமே கற்பிக்க பயிற்சிகள் மேற்கொள்ளுதல் அவசியம்.

8 பயிற்சியாளருக்கென தனி வருகைப் பதிவேடு பராமரிப்பதுடன், அதனைத் தலைமை ஆசிரியர் பார்வையிட்டு நாள்தோறும் சுருக்கொப்பம் இடுதல் வேண்டும். ஆய்வு அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிடும் நாளில் இதனைத் தவறாமல் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

9 இவ்வாணை கிடைக்கப்பெற்ற மறு நாள் முதல் பி.எட் கற்றல்/கற்பிப்பு பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது. (பயிற்சி காலம் 16 வாரங்கள்).

10 இக்கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கான அனுமதி 2021–22(இரண்டாம் ஆண்டு).ஆம் ஆண்டிற்கானதா என்பதை சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

11 இக்கற்றல் கற்பித்தல் பயிற்சியானது 2021–22(இரண்டாம் ஆண்டு) ஆம் கல்வி ஆண்டில் மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்வருங்காலங்களில் மாறுபட்ட கல்வியாண்டில் பயிற்சி மேற்கொண்டது கண்டறியப்படின் இவ்வனுமதி ஆணை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பள்ளிகளின் பெயர்ப் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

Digitally Sig
SALEM
Signing Dat
18:33

பெறுநர்–
முதல்வர், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி , பேர்லேண்ட்ஸ், சேலம்–636016.

நகல் –
சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

## தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
### ஓ.மு.எண்: 5206/இ1/2021நாள் : .12.2021

பொருள்: கற்பித்தல் பயிற்சி - சேலம் மாவட்டம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் பி..எட்., இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்க்கு கற்பித்தல் பயிற்சி - ஆணை வழங்கல் சார்பு .

பார்வை: சேலம் மாவட்டம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியில் கல்லூரி முதல்வரின் கடிதம் நாள்: 24.11.2021

--------------

சேலம் மாவட்டம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியில் 2021.2022 ஆம் கல்வியாண்டில் பி..எட்., இரண்டாம் ஆண்டு பயின்று வரும் கீழ்கண்ட 01 மாணவர்களுக்கு கல்வி பாடதிட்டத்தின் ஒரு பகுதியாக கற்பித்தல் பயிற்சியினை அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கற்பித்தல் பயிற்சிபெற அனுமதி கோரிய விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

எனவே சார்ந்த கல்லூரியின் முதல்வர் அளித்துள்ள கடிதத்தின் அடிப்படையில் கீழ்கண்ட மாணவர்க்கு அவருக்கெதிரே குறிப்பிட்டுள்ள பள்ளியில் 10.12.2021 முதல் 16 வாரங்கள் கற்பித்தல் பயிற்சி பெற கீழ்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | G.VINOTHINI | Chemistry | P.K.V.GOVT.HR.SEC.SCHOOL MOOKARETTIPETTI. |

1. பள்ளியின் அன்றாட பணிகளுக்கு இடையூறு இல்லாமல், கற்பிப்புப் பயிற்சிமேற்கொள்ளுதல் வேண்டும்.
2. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வழிகாட்டி ஆசிரியர் நியமனம் செய்யப்படவேண்டும்.
3. பாடக்குறிப்பேடு பராமரித்தல் வேண்டும் (Notes of Lesson) அதனை வழிகாட்டி ஆசிரியர் (ஒவ்வொருநாளும்) ஆய்வு செய்து குறிப்பெழுதுதல் வேண்டும்.
4. பள்ளியின் முறையானஆசிரியர்கள் போல் பள்ளிவேலை நேரத்திற்குமுன் வருவதுடன், பள்ளி முடிவுற்ற பின்னரே, பள்ளியை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பதுடன், பள்ளி வேலை நேரத்தில் பள்ளியிலேயே இருத்தல் வேண்டும்.
5. வாராந்திரத் தேர்வுகள் நடத்தி அதனை மதிப்பீடுசெய்து, மாணவர்கள் தகுதி பற்றிய பதிவேடு ஒன்றைப் பராமரித்தல் வேண்டும். இதனை வழிகாட்டி ஆசிரியர்கள் பார்வையிட்டு குறிப்பெழுதல் வேண்டும்.
6. நாள்தோறும் நடத்தப்பட வேண்டிய பாடங்கள் சார்ந்து முன்னதாக குறிப்பெடுத்து அவைகளைக் கொண்டு மட்டுமே கற்பிக்க பயிற்சிகள் மேற்கொள்ளுதல் அவசியம்.
7. பயிற்சியாளருக்கென தனிவருகைப் பதிவேடு பராமரிப்பதுடன் அதனைத் தலைமைஆசிரியர் பார்வையிட்டு நாள்தேறும் சுருக்கொப்பம் இடுதல் வேண்டும். ஆய்வு அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிடும் நாளில் இதனைத் தவறாமல் முன்னிலைப்படுத்தப்படவேண்டும்.
8. இக்கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கான அனுமதி 2021-2022 ஆம் ஆண்டிற்கானதா என்பதை சம்மபந்தப்பட்ட பள்ளித் தலைமையரிசிரியர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
9. இக்கற்றல் கற்பித்தல் பயிற்சியானது 2021-2022ஆம் ஆண்டில் மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்வருங்காலங்களில் மாறுபட்ட கல்வியாண்டில் பயிற்சி மேற்கொண்டது கண்டறியப்படின் இவ்வனுமதி ஆணை எவ்விதமுன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் எனவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட ஆணையினை மாற்றவோ இரத்து செய்யவே கூடாது எனவும் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளும் பள்ளிக்கு எவ்விதமானகுந்தகமும் ஏற்படாவண்ணம் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரின் அறிவுரைகளை பின்பற்றி செயல்படவேண்டும் எனவும் சார்ந்தகற்றல்,கற்பித்தல் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

Digitally Signe

முதன்மைக்கல்வி அலுவலர்,
தருமபுரி

SALEM
Signing Date:
18:33

பெறுதல் : மேற்கண்டபள்ளி தலைமையாசிரியர்

நகல் : ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி சேலம் மாவட்டம்,

## விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க. எண். 4247/அ3 /2021, நாள். 14 .12.2021

பொருள் : ஆசிரியர் பயிற்சி - சேலம் மாவட்டம் - ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு உற்றுநோக்கல் மற்றும் கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி கோரியது - அனுமதி அளித்தல் - சார்பு.

பார்வை : சேலம் மாவட்டம் , ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி முதல்வரின் கடிதம் நாள் 09.12.2021.

---

விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு / நகராட்சி உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் உற்றுநோக்கல் மற்றும் கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி வேண்டி சேலம் மாவட்டம், சேலம் மாவட்டம் , ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி முதல்வரின் கடிதம் பெறப்பட்டதையடுத்து , கல்வியியல் கல்லூரி பயிலும் மாணவர்களுக்கான உற்றுநோக்கல் மற்றும் கற்றல் கற்பித்தல் பயிற்சியை 15.12.2021 முதல் 16 வாரங்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு /நகராட்சி உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் மேற்கொள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குகீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) பயிற்சி ஆசிரியர்கள் தாம் மேற்கொள்ளும் உற்று நோக்கல்/கற்பித்தல் வகுப்புகளுக்கான பாடத்திட்டம், கற்பித்தல் உபகரணங்களை, பயிற்சி முடியும்வரை பள்ளியில் வைத்திருத்தல் வேண்டும்.

2) இவர்களின் கற்பித்தல் பணி திருப்திகரமாக உள்ளது என்பதை பள்ளியின் பாட வழிகாட்டி ஆசிரியர்மூலம் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமைஆசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

3) நாள்தோறும் இவர்கள் எடுத்த வகுப்பு/உற்றுநோக்கிய வகுப்பு, பயன்படுத்திய உபகரணங்கள்/துணைக்கருவிகள் போன்ற விவரங்களை தனியே ஒரு பதிவேடாக பராமரித்து பள்ளியின் தலைமை ஆசிரியர் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

4) இவர்களின் கற்பித்தல் பணி முறையாக இல்லாதபட்சத்தில் முன்னறிவிப்பு ஏதுமின்றி பள்ளிப் பயிற்சியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுவர்.

5) முதன்மைக் கல்வி அலுவலர்/மாவட்டக் கல்வி அலுவலர் பள்ளிப் பார்வையின்போது பயிற்சி ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபடவில்லை என்றாலோ தேவையான துணைக்கருவிகள் (உபகரணங்கள் பயன்படுத்தவில்லை என்றாலோ, சம்மந்தப்பட்ட பாட வழிகாட்டி ஆசிரியர், பள்ளியின் ஆசிரியரே அதற்கு பொறுப்பாவார்)

6) சம்மந்தப்பட்ட கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் குறைந்தபட்சம் வாரம் ஒருமுறை பயிற்சி மேற்கொண்டுள்ள பயிற்சி ஆசிரியர்களை வாரம் ஒரு முறையாவது பள்ளியில் அவர்களின் கற்பித்தலை உற்று நோக்கி ஆய்வு செய்து அவர்களின் கற்பித்தலைநெறிப்படுத்த வேண்டும்.

7) பயிற்சி ஆசிரியர்கள் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமைஆசிரியரின் முன் அனுமதியின்றி பயிற்சி நாட்களில் பள்ளிக்கு வருகை தராமல் இருத்தல் கூடாது.

Digitally Signed By:
SALEM
Signing Date:21.04.
18:33

8) பள்ளியில் ஒரே நேரத்தில் 20 பயிற்சி ஆசிரியர்களுக்கு மேல், கற்பித்தல் பணியில் ஈடுபட தலைமை ஆசிரியர்கள் அனுமதிக்கக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும்போதும் அரசால் தமது கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆணையில் வழங்கப்பட்ட விதிமுறைகளை கல்லூரிகள் மீறுவதாக தெரியவந்தாலும் இந்த அனுமதி ஆணை உடனடியாக ரத்து செய்யப்படும்.

| வ.எண் | பள்ளியின் பெயர் | அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு உயர்நிலைப் பள்ளி, மரகதபுரம் | 1 |

14/12/21

முதன்மைக்கல்வி அலுவலர்

விழுப்புரம்

பெறுநர்- முதல்வர், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி, சேலம் மாவட்டம்,

நகல்- சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்,
அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகள், விழுப்புரம் மாவட்டம்.

Digitally
SALEM
Signing
18:33

தருமபுரி மண்டலம். தருமபுரி - 636 705.

ந.க.எண்.3261/அ3/2022 நாள். .06.2022

கடிதம் நகல் தகவலுக்காகவும், தக்கநடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
தருமபுரி மண்டலம். தருமபுரி.

இணைப்பு : மேற்கூறியவாறு

பெறுநர்

முதல்வர் / செயலர்,
அரசு/ அரசு உதவிபெறும் / சுயநிதி கலை
அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள்
தருமபுரி மண்டலம், தருமபுரி.

SRI SARADA COLLEGE OF EDUCATION
SALEM-636 016
100
1.07.2022
July

Digitally Signed
SALEM
Signing Date:21
18:33